# 海遊館 OSAKA AQUARIUM KAIYUKAN

## டெம்போஜன் துறைமுகக் கிராமம் வழிகாட்டி




# தமிழ்

タミル語

- நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலை திறந்திருக்கும் நேரங்கள் / காலை 10:00 ~ இரவு 8:00 (கடைசி அனுமதி இரவு 7:00 மணிக்கு)
  குறிப்புகள்:
  * இது பருவத்திற்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்படும்.
  * நீர்வாழ் காட்சிசாலை ஜனவரி மாதத்தில் சில குறிப்பிட்ட தினத்தில் மூடப்படும் (மொத்தம் 2 நாட்கள்)

- அனுமதிக் கட்டணம் / பெரியவர் (16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர் அல்லது உயர் நிலைப் பள்ளி மாணவர்) 2,700 யென்
  சிறுவர் (தொடக்கப் பள்ளி மற்றும் ஜூனியர் உயர் நிலைப் பள்ளி மாணவர்) 1,400 யென்
  முன்பள்ளிக் குழந்தை (3 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்) 700 யென்
  குறிப்புகள்:
  * குழு வருகை பற்றிய முன்பதிவுகளுக்கும் விசாரணைகளுக்கும், 06-6576-5533 என்ற எண்ணில் எங்கள் குழு வருகைப் பதிவுப் பணியாளரை அழைக்கவும்.

## அணுகல் வரைபடம்




<ரயில் மூலம்> ◎ ஒசாகாவில் (உமேடா) இருந்து தோராயமாக 30 நிமி.
◎ நம்பாவில் (ஷின்சைபாஷி) இருந்து தோராயமாக 30 நிமி.
◎ ஒசாகா நகர சப்வே சுவோ வழியில் "ஒசகாகோ" நிலையத்திலிருந்து தோராயமாக 5 நிமி. நடை

<நகரப் பேருந்து மூலம்> ◎ ஒசாவாவிலிருந்து (உமேடா) தோராயமாக 40 நிமிடங்கள், "டெம்போஜன் துறைமுகக் கிராமம்" நிறுத்தத்திற்கு அருகில்

<விமான நிலையத்தில் இருந்து> ◎ கன்சாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து: ரயில் மூலம் தோராயமாக 65 நிமி. / இடைநில்லா உல்லாசப் பேருந்து மூலம் 60 நிமி.
◎ ஒசாகா விமான நிலையத்திலிருந்து: ரயில் மூலம் தோராயமாக 60 நிமி.

## முதன்மை அணுகல் தகவல்

கையுகான்


- ஹருகாஸ் (தென்னோஜி நிலையம்) செல்ல சுமார் 40 நிமிடங்கள்
- ஒசாகா கோட்டை (மொரினோமியா நிலையம்) செல்ல சுமார் 30 நிமிடங்கள்
- ஷின்சைபாஷி செல்ல சுமார் 30 நிமிடங்கள்
- யுனிவர்சல் ஸ்டுடியோஸ் ஜப்பான்® செல்ல சுமார் 16-45 நிமிடங்கள்
- கன்சாய் சர்வதேச விமான நிலையம் செல்ல சுமார் 90 நிமிடங்கள்

海遊館 OSAKA AQUARIUM KAIYUKAN　天保山マーケットプレース TEMPOZAN MARKETPLACE


1-1-10 Kaigandori, Minato-ku, Osaka City 552-0022
TEL.06-6576-5501 https://www.kaiyukan.com/


• மேலே பட்டியலிடப்பட்டுள்ள அனைத்துக் கட்டணங்களும் வரி உள்ளடங்கலானவை. • புகைபிடித்தல், சாப்பிடுதல், குடித்தல் அல்லது பிற விருந்தாளிகளுக்குத் தொந்தரவுகளை ஏற்படுத்தும் பிற நடவடிக்கைகளைத் தவிர்க்கவும். • அபாயகரமான பொருட்களை அல்லது பிற பொருட்களை, குறிப்பாகச் சுற்றுப்புறங்களுக்குள் கொண்டுவர நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலையால் தடை செய்யப்பட்டுள்ளவற்றை எடுத்துவருவதைத் தவிர்க்கவும். • சில குறிப்பிட்ட நீர்வாழ் உயிரினங்களின் காட்சியகத் தொட்டிகளில் புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ள தொட்டிகளில் தயவுசெய்து இந்த விதியைப் பின்பற்றவும். • இந்தச் சிற்றேட்டின் உள்ளடக்கம் முன் அறிவிப்பு இல்லாமல் மாற்றத்திற்கு உட்படும்.

2023.01





| | | | |
|---|---|---|---|
| தகவல் | கட்டணத் தொலைபேசி | முதலுதவி | தாய்ப்பாலூட்டும் அறை |
| நாணயத்தில் இயக்கப்படும் பெட்டகம் | கழிவறை | சக்கர நாற்காலியில் செல்லக்கூடிய கழிவறை | நகரும் படிக்கட்டு |
| மின்தூக்கி | காவலர் நிலையம் | ATM காலை 11:00 ~ இரவு 9:00 | AED |

1 நுழைவுச்சீட்டு வழங்குமிடம் 2 குழு வருகைப் பதிவு 3 கையுகான் கூடம்
4 கையுகான் அருங்காட்சியகக் கடை

1 பேருந்து நிறுத்தம் (ஒசாகா நிலையம் மற்றும் நம்பாவுக்கு)
2 பேருந்து நிறுத்தம் (கன்சாய் சர்வதேச விமான நிலையத்திற்கு)
3 மோட்டார்கோச்சுக்கான தரிப்பிடம்
4 தற்காலிகமாகத் தரித்து வைப்பதற்கான ஷட்டில் பஸ்

1



## டெம்போஜன் சந்தை

நினைவுப்பரிசு மற்றும் பொதுவான வணிகப்பொருள் கடைகள், உணவகங்கள், "நானிவா கியுஷின்போ யோகோசோ" மற்றும் பல்வேறு கவர்ச்சிக்க தொழிலகங்களுக்குச் சென்று பார்த்து மகிழுங்கள்.

https://www.kaiyukan.com/thv/marketplace/
வணிக நேரம் காலை 11:00 ~ இரவு 8:00
(பருவம் மற்றும் கடைகளுக்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்படும்)

## நானிவா கியுஷின்போ யோகோசோ

கிட்டத்தட்ட 1965-இல் ஒசாகாவில் இருந்த பாரம்பரிய பொருட்கள் வாங்கும் மற்றும் பொழுதுபோக்குப் பகுதியின் மறுஉருவாக்கம் - உயர்தர உணவு விருந்துகளைப் பரிமாறுகின்ற நன்கு நிலைநாட்டப்பட்ட பிராண்ட் பெயர் கடைகளை ஒன்றாகக் கொண்டுவருகின்ற ஒரு ஃபுட் தீம் பார்க்.





## 2 LEGOLAND® கண்டுபிடிப்பு மையம் ஒசாகா

தாமாகவே கட்டட செங்கல்களின் பாரிய தேர்வு மற்றும் கிளர்ச்சியூட்டுகின்ற கவர்ச்சிகளின் கலவையின் மூலம் LEGO பிரிக்ஸ் உலகை அனுபவியுங்கள்!

தொ.பே.06-6573-6010

3



## டெம்போஜன் ஜெயண்ட் ஃபெரிஸ் வீல்

உலகின் மிகப்பெரிய ஃபெரிஸ் சக்கரங்களில் ஒன்று. தெளிவான வானிலையுள்ள நாட்களில், ஒசாகா நகரம் முதல் அகாஷி கைக்கியோ பாலம் வரை மற்றும் கன்சாய் சர்வதேச விமான நிலையம் வரை விரிந்திருக்கும் பரந்த காட்சியைக் கண்டு மகிழுங்கள்.

http://www.senyo.co.jp/tempozan/

4




## வேடிக்கை பார்க்கும் பாய்மரக் கப்பல் "சான்டா மரியா"

ஒசாகா விரிகுடா பகுதியைச் சுற்றி கடற்பயணம் மேற்கொண்டு மகிழுங்கள் (45 நிமிடங்கள்)

https://suijo-bus.osaka/english/santamaria/

5




## ஹோட்டல் சீகல் டெம்போஜன் ஒசாகா

யுனிவர்சல் ஸ்டுடியோஸ் ஜப்பான்™ அசோஷியேட் ஹோட்டல்

https://www.hotelseagull.co.jp/

6




## ஷட்டில் போட் "கேப்டன் லைன்"

கையுகான் மேற்கு பையர் முதல் யுனிவர்சல் நகரத் துறைமுகம் வரையான ஷட்டில் (10 நிமிடங்கள்)

http://www.mmjp.or.jp/Capt-Line/

## கையுகான் பாதுகாப்பது என்ன?

# Ring of Fire, Ring of Life.



கையுகானின் வழிகாட்டும் கோட்பாடானது, பிரிட்டிஷ் விஞ்ஞானியான ஜேம்ஸ் லவ்லாக் பரிந்துரைத்த "கையா கருதுகோள்" என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது, இது, "பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களும் அவற்றின் கரிமச் சுற்றுச்சூழல்களும் ஓர் ஒற்றை மற்றும் சுய-ஒழுங்குபடுத்தும் சிக்கலான தொகுதியை உருவாக்க நெருக்கமாக ஒருங்கிணைக்கப்படுகின்றன" என்று முன்மொழிகிறது.
"நெருப்பு வளையம்" (ரிங் ஒஃப் ஃபயர்) என்பது பசிபிக் பெருங்கடலைச் சூழ்ந்திருக்கின்ற பசிபிக் சுற்று எரிமலைப் பட்டி. இது, அதன் உயர் அடர்த்தியான உயிரிப்பல்வகைத்தன்மை மூலம் :உயிர் "சுழற்சியின்" (ரிங் ஒஃப் லைஃப்) மேல் கவிந்துகொள்கிறது.
இந்த இரண்டு "வளையங்கள்" மூலம் பரிந்துரைக்கப்படும் கருத்துருக்களைக் கொண்டு, கையுகான் முடிந்தளவுக்குப் பற்றுறுதியாக பசிபிக் பெருங்கடலைச் சுற்றி இயற்கையான சூழலைத் திரும்பவும் உருவாக்குகிறது.
இங்கு வருகை தரும் அனைவரும் வாழ்வின் அருமையையும் அதிசயத்தையும் மற்றும் நம்மைச் சுற்றி எங்குமுள்ள இயற்கைச் சூழலின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, மறுபரிசீலனை செய்கிறார்கள் என்பது எங்கள் உண்மையான நம்பிக்கையாகும்.

## கையுகானின் கடல் விலங்குகள்



### நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலை வாயில்

சுரங்க வடித்திலுள்ள தொட்டி நீங்கள் அப்படியே கடலுக்கடியில் நடப்பது போல உணரச் செய்கிறது.
பசுமூக்குத் திருக்கை, தழும்புள்ள நரிமுகம் மற்றும் பல.



### 1 ஜப்பான் ஃபாரஸ்ட்

ஜப்பானியக் காட்டில் நான்கு பருவங்களுக்கும் அதன் அழகு இருக்கிறது.
ஆசிய சிறிய-வளைநகமுடைய நீர்நாய், ஜப்பானிய மாபெரும் சாலமாண்டர் மற்றும் பல.

### 2 அலியூட்டியன் தீவுகள்

கடுமையாக இரக்கமற்ற் மற்றும் உறைந்த சூழலில் அலியூட்டியன் சங்கிலி அமைந்துள்ளது. எனினும் சுற்றியுள்ள பெருங்கடல் நீரில் வளமான ஊட்டச்சத்துகள் நிரம்பி வழிகின்றன. இந்த வாழிடமானது முடிச்சுகள் உள்ள கடற்கிளி மற்றும் பிற நட்பான பறவை இனத்துடன், மிகப் பரந்துபட்ட மீன் இனங்களுக்கு ஆதரவளிக்கிறது.
முடிச்சுகள் உள்ள கடற்கிளி மற்றும் பல




### 3 மாண்டெரே விரிகுடா

தரையிலும் நீருக்கடியிலும் காலிஃபோர்னியா கடல் சிங்கங்கள் மற்றும் ஹர்பர் நீர்நாய்களின் வாழ்க்கையைக் கண்டறியுங்கள்.
ஹர்பர் நீர்நாய் மற்றும் காலிஃபோர்னியா கடல் சிங்கம்.

### 4 பனாமா வளைகுடா

வளைய வாலுள்ள கோட்டிகள் திறமையாகவும் விரைவாகவும் மரங்களில் மேலே ஏறுகின்ற அதேவேளை, பனாமா மீன் இனங்களோ பனாமானியன் நீரில் நீந்துகின்றன.
வளைய வாலுள்ள கோட்டி, நீண்ட-முதுகெலும்பு முள்ளம்பன்றி மீன் மற்றும் பல.

### 5 ஈக்வடார் மழைக் காடு



மழைக் காட்டின் நீரானது உலகிலேயே மிகப் பெரிய நன்னீர் மீனான பிராருசு மற்றும் உலகிலுள்ள எலி இனங்களில் மிகப் பெரிய இனமான கப்பிபாரா மற்றும் பிற பல்வகையான விலங்கினங்கள் மற்றும் தாவரங்களை உருப்படுத்திக் காட்டுகிறது.
பிராருசு, கப்பிபாரா மற்றும் பல.



### 6 அண்டார்டிகா

பூமியின் தென் முனையிலுள்ள தண்ணீரில் பறக்கின்றன என பென்குயின்கள் நீந்துகின்றன.
அடெலீ பென்குயின், கிங் பென்குயின் மற்றும் பல.

### 7 தாஸ்மான் கடல்

தாஸ்மானியன் கடலில் மிகச்சிறப்பாகத் துள்ளிப்பாய்பவையான பக்கவாட்டில் வெள்ளை நிறமுடைய பசிபிக் டால்ஃபின்கள், நீரின் ஊடாக மிகவேகமாக நீந்துகின்றன.
பக்கவாட்டில் வெள்ளை நிறமுடைய பசிபிக் டால்ஃபின்



### 8 பெரும் தடுப்புப் பவளத்திட்டு

பவளப் பாறைகள், "பெருங்கடலின் தொட்டில்" என்றும் கூறப்படுகின்றன. இயற்கையின் அழகால் மனது ஆட்கொள்ளப்படுகையில் நேரம் எவ்வாறு பறக்கிறது!
பட்டர்ஃபிளைஃபிஷ் மற்றும் டாம்செல்ஃபிஷ் இனங்கள் மற்றும் பல.





### 9 பசிபிக் பெருங்கடல்

பசிபிக் பெருங்கடல் ---பூமியிலுள்ள மிகப்பெரிய பெருங்கடல். நீரில் மெதுவாகவும் அமைதியாகவும் நீந்துகின்ற பாரிய திமிங்கிலச் சுறாவும் பிற கடல்வாழ் உயிரினமும் எல்லையற்ற பரப்புள்ள நீர்க் கிரகத்தை உருவாக்குகின்றன.
திமிங்கிலச் சுறா, ஸ்கேலாப்ட் ஹம்மர்ஹெட், ஹம்ப்ஹெட் ராஸ்ஸி மற்றும் பல.

### 10 செட்டோ உள்நாட்டுக் கடல்

செட்டோ உள்நாட்டுக் கடல் ஆனது மேற்கு ஜப்பானில் அமைந்துள்ளது. பாறைகளுக்குப் பின்னால் ஓய்வெடுக்கின்ற பொதுவான ஆக்டோபஸ்களை அல்லது இன்னமும் கடல் படுக்கையில் படுத்திருக்கும் பாஸ்டர்ட் ஹலிபட்களைத் தேடுவோம்.
பார்ட் நைஃப் ஜா, ரெட் சீபிரீம், ஸ்பைனி லோப்ஸ்டர் மற்றும் பல.

### 11 பருவகாலக் காட்சிப்பொருள்

பருவத்திற்குப் பருவம் இங்கு காட்சிக்கு வைக்கப்படும் கடல்வாழ் உயிரினம் மாறுபடும் (எ.கா. பெரிய துடுப்புப் பவளக் கணவாய்). எங்கள் பொறுப்பாளர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

### 12 சிலி கடற்கரை

ஜப்பானிய நெத்திலி மீன்களின் மாபெரும் கூட்டம் ஒரு பாயும் வெள்ளித் திரை போல மேலெழுகிறது - இயற்கை உருவாக்கிய ஓர் உண்மையான படைப்பு.
ஜப்பானிய நெத்திலிகள் மற்றும் பல.

### 13 குக் நீரிணை



துடுப்புகள் போன்ற வடிவத்திலுள்ள தமது தட்டையான முன்கைகளை (ஃபிளிப்பர்களை) பயன்படுத்தி லாக்கர்ஹெட் கடலாமைகள் அழகாக நீந்துகின்றன. கூடுகட்டும் பெண் கடலாமைகள் தம்மைத் தாமாகவே மணற்பாங்கான கடற்கரைக்கு இழுத்து வரும்போது தவிர, அவை நீரில் அமிழ்ந்தவாறே இருக்கின்றன.
லாகர்ஹெட் கடலாமை, பிங் மவோமவோ மற்றும் பல.

### 14 ஜப்பான் டீப்

உலகிலேயே மிகப்பெரிய நண்டு வகையான மாபெரும் சிலந்தி நண்டும் ஆழ்கடலின் பிற திகைப்பான உயிரின வடிவங்களும் இந்த மண்டலத்தில் காட்சிக்கு உள்ளன.
மாபெரும் சிலந்தி நண்டு, மாபெரும் ஐசோபொட் மற்றும் பல.



குறிப்பு: காட்சியிலுள்ள கடல்வாழ் விலங்குகள் முன்னறிவிப்பின்றி மாற்றத்திற்கு உட்படும்.

# 15 நியூ ஜெல்லிஃபிஷ் ஏரியா

**நாடு முழுவதுமான ஜெல்லி மீன்களின் மிகப் புகழ்பெற்ற தொகுப்புகளில் ஒன்று. வருகை தருபவர்கள் இதன் மாயாஜால அழகால் கவரப்படுவார்கள்.**

மூன் ஜெல்லி, பிரவுண் ஜெல்லிஃபிஷ் மற்றும் பல.



## 16 ஆர்க்டிக்

பனிக்கட்டி நிறைந்த வடபகுதிக்குரிய நிலப்பரப்பை அனுபவியுங்கள்

மேற்கூரையில் உள்ள பனிக்கட்டியைப் பாருங்கள், தலைக்கு மேலுள்ள வளைந்த தொட்டியிலிருந்து உங்களைப் பார்த்துப் புன்னகைக்கும் ரிங்ட் சீல்களை நேரில் பாருங்கள். ரிங்ட் சீல்களின் வாசனையை நுகர்ந்து, அவை தமது தட்டையான முன்கைகளை (ஃபிளிப்பர்களை) பயன்படுத்தி பனிக்கட்டிகளுக்கு இடையே நீந்துவதைக் கவனிக்கையில், கடுங்குளிரான ஆர்க்டிக்கை உணருங்கள்.



## 17 போக்லாந்துத் தீவுகள் (மால்வினாஸ்)


கவனித்துக்கேளுங்கள், நுகருங்கள், பிரமிப்படையுங்கள்

இங்கு மீண்டும் உருவாக்கப்பட்ட அவற்றின் வாழிடத்தில் வசிக்கும் ராக்ஹாப்பர் பெங்குயின்களைக் கவனித்துக்கேட்டு, நுகருங்கள். நீரில் வேகமாக நீந்தித்திரியும் அல்லது பாறைகளுக்கு அருகில் பாய்ந்துதிரியும் பெங்குயின்களைக் கண்டு பிரமிப்படையுங்கள்.



## நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலை வழிகாட்டி

- நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலை வாயில்
- 1 ஜப்பான் ஃபாரஸ்ட்
- 2 அலியூட்டியன் தீவுகள்
- 3 மாண்டெரே விரிகுடா
- 4 பனாமா வளைகுடா
- 5 ஈக்வடார் மழைக் காடு
- 6 அண்டார்டிகா
- 7 தாஸ்மான் கடல்
- 8 பெரும் தடுப்புப் பவளத்திட்டு
- 9 பசிபிக் பெருங்கடல்
- 10 செட்டோ உள்நாட்டுக் கடல்
- 11 பருவகாலக் காட்சிப்பொருள்
- 12 சிலி கடற்கரை
- 13 குக் நீரிணை
- 14 ஜப்பான் டீப்
- 15 ஜெல்லிஃபிஷ்
- 16 ஆர்க்டிக் (கடலுக்கடியில்)
- 16 ஆர்க்டிக் (பெருங்கடல் மேற்பரப்பு)
- 17 போக்லாந்துத் தீவுகள் (மால்வினாஸ்)
- 18 சிறப்புக் காட்சிப்பொருள்





### ஒலிவடிவ வழிகாட்டி

இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள உயிரினங்களின் அதிசயங்கள், சூழலியல் மற்றும் பிற தகவல்தொடர்பு அம்சங்களைப் பற்றிய அரிதான ஆடியோ மற்றும் காட்சி நுண்ணறிவுகளை விரும்புங்கள். மேலும் விவரங்களுக்கு, எங்கள் சேவை மையம் கவுண்டரில் அணுகவும்

பயன்பாடு கட்டணம் வசூலிக்கப்படும்






- மின்தூக்கி
- தகவல்
- நாணயத்தில் இயக்கப்படும் பெட்டகம்
- முதலுதவி
- கட்டணத் தொலைபேசி
- தாய்ப்பாலூட்டும் அறை
- கழிவறை
- அருங்காட்சியகக் கடை

அதே நாளில் நீர்வாழ் உயிரினங்களின் காட்சிச்சாலைக்குள் மீண்டும் நுழைவதற்கு, நீங்கள் வெளியில் செல்லும்போது கை-முத்திரையைப் பெறுவதை உறுதிப்படுத்தவும்.